රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
அரச கணக்குகள் திணைக்களம்
# Department of State Accounts

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2016.08.03

**அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் : 250/2016 (1)**

அமைச்சின் செயலாளர்கள்,
திணைக்களத்தின் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்

**<u>வெளித் தரப்பினருக்காக முற்பணத் தொகையை செலுத்துவதனை கணக்கு வைத்தல்</u>**

நிதி ஒழுங்குவிதி 365(1) இன் பிரகாரம் நிதியாண்டினுள் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இடைக்கால பணி முற்பணத்தினை பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு இருந்த போதிலும், அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லாத நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் பணி முற்பணத்தை வழங்குவதற்கு அதன் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

தற்போது அரசாங்க அலுவலகக் கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போதும், வேலை ஒப்பந்தங்களுக்காக முற்பணத் தொகையை செலுத்தும் போதும், அது சம்பந்தமாக பின்பற்ற வேண்டிய கணக்கு வைத்தல் ஒழுங்குமுறைகள் குறித்து தெளிவான வழிகாட்டல் இல்லாத படியினால், வெளித் தரப்பினருக்கு வழங்கப்படுகின்ற முற்பணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் ஒழுங்கு முறைகளை பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

1. அலுவலக கட்டட வாடகைக்காக முற்பணங்களை செலுத்தும் போது அந்த மொத்த முற்பணத் தொகையையும் செலவு விடய இலக்கம் 1404 அதாவது, குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி நிருவாக வரி செலவு விடயத்ததிற்கு வரவு வைத்தல் வேண்டும்.

   வேலை ஒப்பந்தங்களுக்காக முற்பணங்களை செலுத்தும் போது செலவு விடய இலக்கம் 2104 இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வேலை முற்பணங்களுக்காக மாத்திரம் உத்தேச முறைமைக்கு அமைவாக கணக்கு வைத்தலை மேற்கொள்ள வேண்டிய அதேவேளையில், ஏனைய மூலதன செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வேலை முற்பணங்களுக்காக இந்த கணக்கு முறைமை ஏற்புடையதாகாது.

2. முற்பணங்களை செலுத்துதல் செலவுகள் மேற்கொள்ளப்படுகின்ற வருடத்தில் செலவாக கணக்கு வைப்பதன் காரணமாக கணக்குக் கால எல்லைகளை தாண்டி செலுத்தப்பட்ட முற்பணத் தொகை குடியரசு கணக்கிற்கு உள்ள உரிமையொன்றாக புலனாகாது. அதனால் முற்பணத் தொகையை செலுத்துவது குடியரசு கணக்கில் வெளிப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பிரதான பேரேட்டுக் கணக்கு இலக்கம் 9188 - வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு மற்றம் 9189 - வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்குகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

3. முற்பணத் தொகையை செலுத்துவதற்கு எதிரபார்க்கின்ற அமைச்சினால்/ மாவட்டச் செயலகத்தினால் செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு முற்பணத்தின் பொருட்டும் மேலே குறிப்பிடப்பட்ட பிரதான

මහා භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka.
General - Tel.: +94 11 2484500/600 Ext.: 1149 Fax : +94 11 2484869 Website : www.sad.gov.lk
Director General - Tel.: +94 11 2484728 Fax : +94 11 2473856 e -mail : dgsa@sad.treasury.gov.lk

பேரேட்டுக் கணக்கின் கீழ் தனியான கணக்கு இலக்கமொன்றை அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அதே வேளையில் முற்பணத் தொகையை செலுத்தும் போது செலவு விடயம் மற்றும் காசேடுகளில் மேற்கொள்கின்ற குறிப்புகளுக்கு மேலதிகமாக பின்வரும் ஜேனல் குறிப்பையும் கணக்கு வைத்தல் வேண்டும்.

9188 - வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு - பற்று

9189 - வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு - செலவு

(செலுத்தப்பட்ட மொத்த வாடகை முற்பணம் அல்லது வேலை முற்பணத் தொகை)

4. ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் அந்த வருடத்திற்குரிய வாடகைப் பெறுமதியை அல்லது ஒப்பந்தங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வேலையின் பிரகாரம் அறவிடப்படுகின்ற முற்பணத் தொகையை பின்வருமாறு கணக்கு வைத்தல் வேண்டும்.

9189 - வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு- பற்று

9188 - வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு - செலவு

(ஒவ்வொரு வருடத்திற்குமுரிய நிலுவை செய்யப்படுகின்ற வாடகையின் பெறுமதியை அல்லது ஒப்பந்தங்களின் ஒரு பகுதியை செலுத்தும் போது அறவிடப்படுகின்ற வேலை முற்பணத்தின் பெறுமதியை முற்பண கணக்கிலிருந்து நீக்குதல்)

5. மேலே குறிப்பிடப்பட்ட பிரதான பேரேட்டுக் கணக்குகள் வருட இறுதியில் உள்ள நிலுவையின் மூலம் தொடர்ந்தும் அறவிட வேண்டிய முற்பணத் தொகை பிரதிநிதித்துவப்படுகின்ற அதேவேளையில் முற்பணங்கள் சம்பந்தமாக அரசாங்கத்திற்குரிய உரிமைகளும் குடியரசு கணக்குகளின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

6. மேலே காட்டப்பட்டுள்ள கணக்குக் குறிப்புகள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கணக்கு வைக்கக் கூடிய விதமாக அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை இந்த சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு அமைவாக, இதன் பின்னர் முற்பணங்களை செலுத்துவதனை கணக்கு வைத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

அதன் பிரகாரம் இது தொடர்பாக 2016.06.09 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 250/2016 இதன் மூலம் இரத்துச்செய்யப்படுகின்றது.

ஒப்பம்: எஸ்.ஆர். ஆட்டிகல

திறைசேரியின் பிரதிச் செயலாளர்.

பிரதி:

கணக்காய்வாளர் அதிபதி